### பீகார் போன்று நாடு முழுவதும்

# வாக்காளர் பட்டியலில் சிறப்பு திருத்தம் செய்ய தேர்தல் ஆணையம் திட்டம்!

புதுடெல்லி, ஜ6லை 14 - பீகாரில் இந்தாண்டு இறுதியில் சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அந்த மாநிலத்தில் வாக்காளர் பட்டியலை முழுமையாக மறு ஆய்வு செய்வதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதனை எதிர்த்து காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்குத்தொடரப்பட்டுள்ளது. இந்நிலையில், பீகார் போன்று நாடு முழுவதும் வாக்காளர் பட்டியலில் சிறப்பு திருத்தம் செய்ய தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது. 2026 ஜனவரி ஒன்றாம் தேதியை தகுதி நாளாக கொண்டு வாக்காளர் பட்டியலை ஆய்வு செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்த சிறப்பு திருத்தத்துக்கு அனைத்து மாநிலங்களும் தயாராகுமாறு மாநில தேர்தல் அதிகாரிகளுக்கு கடந்த 5 ஆம் தேதி தேர்தல் ஆணையம் கடிதம் எழுதியுள்ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் குறிப்பிட்ட ஆண்டு இடைவெளியில் சிறப்பு திருத்தம் நடைபெறும். தற்போது, புதிய விதிமுறைகளுடன் நாடு முழுவதும் ஒரே நேரத்தில் சிறப்பு திருத்தம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. பீகார் மாநிலத்தில் 2003 ஆம் ஆண்டு பட்டியலை அடிப்படையாக வைத்து சிறப்பு திருத்தம் நடைபெறுகிறது.

பீகாரை தொடர்ந்து அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெறும் தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்கம், அசாம் மாநிலங்களில் சிறப்பு திருத்தம் தொடங்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. 2026 ஆம் ஜனவரி ஒன்றாம் தேதி 18 வயது ஆனவர்கள் அனைவரும் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள். அதற்கு முன் பட்டியலில் உள்ளவர்கள் தேர்தல் ஆணையம் கோரும் ஆவணங்களை வழங்கினால்தான் பட்டியலில் தொடரும் நிலை உள்ளது. ஆதார், வாக்காளர் அடையாள அட்டை, ரேஷன் அட்டை இந்த மூன்றையும் தேர்தல் ஆணையம் புறக்கணிக்கக் கூடாது. அதனையும் ஆவணமாக பெற வேண்டும் என்று பீகாரில் வழக்கில் உச்சநீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது. பீகார் வழக்கில் உச்சநீதிமன்றம் பிறப்பிக்கும் இறுதி தீர்ப்புக்கு பிறகு மற்ற மாநிலங்களில் சிறப்பு ஆய்வை தொடங்குவதற்காக அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிடும் என்று கூறப்படுகிறது.



விழுப்புரம் தெற்கு மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, விக்கிரவாண்டி பேரூராட்சி, விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம், ஆசூர், சின்னத்தச்சூர், ஆகிய ஊராட்சிகளில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி மண், மொழி, மானம் காக்க இணைவோம் 'ஓரணியில் தமிழ்நாடு' புதிய உறுப்பினர் சேர்க்கையை வீடு, வீடாகச் சென்று துவக்கி வைத்தார். உடன் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, தலைமை செயற்குழு உறுப்பினர் அப்துல் சலாம், நகர செயலாளர் நைனா முகம்மது, ஒன்றிய செயலாளர் ஜெ.ஜெயபால், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ச.பாலாஜி, மாவட்ட விவசாய அணி தலைவர் பாபுஜீவானந்தம், பேரூராட்சி உறுப்பினர்கள் சர்க்கார் பாபு, சுதா பாக்கியராஜ் , வீரவேல், நகர நிர்வாகிகள் பாபுஜி.பாண்டியன், பிரசாந்த், சித்ரா கோவிந்தன், ஒன்றிய நிர்வாகிகள் சி.முரளி, சாவித்திரி பாலு, ராம்குமார், அசோக்குமார், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் கலைச்செல்வன், மாவட்ட தொழிலாளர் அணி தலைவர் ஹரிஹரன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் பூபாலன் , மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி கதிரவன் , விக்னேஷ், சுந்தர், பாபுஜி.யுவராஜ், ராஜா, மாலதி, நகர இளைஞர் அணி அமைப்பாளர் கார்த்திக், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பாலகிருஷ்ணன், உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA 2, BDA, கிளைச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.

# செஞ்சி கோட்டையை உலக பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோ அறிவிப்பு!

### மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்,எல்,ஏ தலைமையில் கழகத்தினர் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கினர்!

செஞ்சி , ஜூலை 14 - செஞ்சி கோட்டையை உலக பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோ அறிவிப்பு செய்ததையடுத்து செஞ்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தலைமையில் திமுகவினர் பட்டாசு வெடித்து பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினர்.

உலக அளவில் புராதனமான இடங்களை யுனெஸ்கோ குழு ஆய்வு செய்து உலக பாரம்பரிய சின்னமாக அறிவித்து வருகிறது அதன்படி தமிழகத்தில் தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில், ஜெயங்கொண்டான் கங்கைகொண்ட சோழபுரம் கோவில்,மாமல்லபுரத்தில் சிற்பங்கள், மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள நீலகிரி மலை ரயில்,கும்பகோணம் ஐராதீஸ்வரர் கோவில் உள்ளிட்டவை பாரம்பரிய நினைவுச் சின்னங்களாக அறிவித்துள்ளது.

தற்போது சத்ரபதி சிவாஜி ஆட்சிசெய்த 12 கோட்டைகள் மராட்டிய மன்னர்களின் ராணுவ கேந்திரங்களாகஇருந்தவை என்பதால் இவற்றை கலாச்சார ரீதியிலான உலக பாரம்பரிய சின்னமாக அறிவிக்க வேண்டும் எனயுனெஸ்கோவிற்கு ஒன்றிய அரசு பரிந்துரைத்தது.

அந்தப் பட்டியலில் 11 கோட்டைகள் மகாராஷ்டிராவிலும் தமிழகத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சிக்கோட்டையும் இடம் பெற்றுள்ளன.

மராட்டியர்கள் கிபி 1678 முதல் 1697 வரை செஞ்சிக்கோட்டையை தலைமையிடமாக கொண்டு ஆட்சி செய்ததால் பிரதான பட்டியலில் இந்த கோட்டையில் இடம் பெற்றுள்ளது.மத்திய அரசு பரிந்துரைத்துள்ள 12 கோட்டைகளையும் யுனெஸ்கோவின் தேர்வு குழு பிரதிநிதிகள், அன்றைய தமிழ்நாடு அரசின்சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சராக இருந்த செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ மாவட்ட ஆட்சியர் பழனி உள்ளிட்ட அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

யுனெஸ்கோ பிரதிநிதி உள்ளிட்ட ஒன்றிய அரசின் அதிகாரிகள், இந்திய தொல்லியல் துறைஅதி காரிகள் கடந்த ஆண்டு செப்டம்பர் 27ஆம் தேதி செஞ்சிகோட்டை உச்சி மலை வரை ஏறி ஆய்வு செய்தனர்.அப்போது கோட்டையில் உள்ள கல்யாண மஹால், யானை குளம்,தர்பார் மண்டபம், நெற்களஞ்சியம்,கோட்டையில் உள்ள பாலம்,கோட்டை மலை மீது உள்ள நெற்களஞ்சியம் ,பீரங்கிகள்,உள்ளிட்ட வரலாற்று சின்னங்களைஅவர்கள் பார்வையிட்டு சென்றார்.

இந்நிலையில் இன்று யுனெஸ்கோ நிறுவனம் மகாராஷ்ட்ராவில்சத்ரபதி சிவாஜி ஆட்சிசெய்த 11கோட்டைகள் , தமிழகத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சிக் கோட்டையையும் உலக பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோ நிறுவனம் அறிவித்துள்ளது.இந்நிலையில்செஞ்சி கோட்டையை உலக பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோ அறிவித்ததை வரவேற்று செஞ்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டபொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில்திமுகவினர் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர்.

இதில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜய குமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார்அலிமஸ்தான்,ஒன்றிய செயலாளர்கள் மேல்மலையனூர் நெடுஞ்செழியன், வல்லம் தெற்கு துரை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன்,உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக செய்தியாளர்கள் சந்திப்பில் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கூறுகையில்:

செஞ்சி கோட்டையை உலக பாரம்பரிய நினைவுச் சின்னமாக யுனெஸ்கோ நிறுவனம் அறிவித்துள்ளதைவரவேற்கிறோம்.வரலாற்று சிறப்புமிக்க செஞ்சிக்கோட்டையை நீண்ட காலமாக பொதுமக்களுடைய எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் உலக பாரம்பரிய நினைவு சின்னத்தில் செஞ்சிக் கோட்டை பிடித்து இருப்பதில் மிக்க மகிழ்ச்சி.இதற்காக உழைத்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

உலக அளவில் செஞ்சிக்கோட்டை யுனெஸ்கோவில் இடம் பெற்றுள்ளதால் பெரும் வரவேற்பு பெற்றுள்ளது இதனால் தமிழக அரசும் இந்திய அரசும் இணைந்து செஞ்சிக் கோட்டையின் வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு கட்டமைப்புகள் உருவாக்குகின்ற நிலையை நாம் பெற்றிருக்கிறோம் செஞ்சிக்கோட்டையை உலக அளவில் எல்லோரும் அறிகின்ற வகையில் யுனெஸ்கோ அங்கீகாரம் அளித்துள்ளது.

முதலமைச்சரின்தொடர் முயற்சியால் செஞ்சிக் கோட்டையை பிரதான சின்னமாக யுனெஸ்கோ அறிவித்துள்ளதை வரவேற்றும், பாராட்டியும்,அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துள்ளார்.

செஞ்சி கோட்டையின் வலராறு:

தமிழகத்தினுடைய வரலாற்று பெருமைக்கு தனிச் சான்றாய் இருப்பது செஞ்சிக்கோட்டை இந்த செஞ்சிக்கோட்டை மூன்று கோட்டைகளாக வானுயர்ந்து நின்று கொண்டிருக்கிறது ராஜகிரி, கிருஷ்ணகிரி, சந்திரவராயன் துர்க்கம் இந்த மூன்று கோட்டைகளின் சுற்றளவு சுமார் 12 கிலோமீட்டர் இந்த கோட்டைகளின் நிலப்பரப்பு சுமார் 12000 சதுர ஏக்கர்கொண்டுள்ளது.

எதிரிகளும் உட்புக முடியாத பலம் வாய்ந்த மிகப் பெரிய கோட்டை இங்கு செஞ்சி கோட்டை உயர்ந்து நிற்கிறது.

மதில் சுவர் ஆழம் நிறைந்த அகழி கலைநய மிக்க கற்க கோயில்கள் நெற்களஞ்சியம் கல்யாண மஹால் உடற்பயிற்சி கூடம் இவைகளைக் கொண்டு அமைக்கப்பட்ட திருத்தலங்கள் இப்படி பல்வேறு விதமானகலை சிற்பங்களோடு செஞ்சிக் கோட்டை இன்று வரை உலக சுற்றுலா பயணிகளுக்கு மட்டுமல்லாது இந்த தமிழகத்தில் இருக்கிற பிற மாநிலங்களில் இருந்து வருகிற அத்தனை பேரும் கண்டுகளிக்கிற ஒரு மாபெரும் சுற்றுலாத்தலமாக செஞ்சி கோட்டை விளங்கி கொண்டிருக்கிறது.

இந்த செஞ்சிக் கோட்டை கிபி 1200 இல் ஆனந்த கோன் அதற்குப் பிறகு கிருஷ்ணன் கோன் அடுத்து கோனேரி கோன் அதற்குப் பிறகு அவருடைய மகன் கோவிந்த கோன் அடுத்து அவருடைய வாரிசாக வந்த புளிய கோன் இப்படி ஐந்து தமிழ் மன்னர்களுடைய ஆட்சி இந்த செஞ்சியில் தொடங்கியது.

அதற்குப் பிறகு பத்து ஆண்டுகள் குறும்பர் இன கோபி லிங்கன் செஞ்சிக் கோட்டையைஆட்சி செய்தார் அதற்குப் பிறகுநாயக்க மன்னர்கள் அதற்கு முன்பு ஈசாளர்கள் நாயக்கர்கள் இடமிருந்து சுல்தான்களுடைய ஆட்சி சுல்தான்களுக்கு பிறகு மராட்டிய மன்னன் சிவாஜி மன்னுடைய ஆட்சி செஞ்சிக் கோட்டையில் 20 ஆண்டு காலம் கிபி 1677 தொடங்கி 1697 வரை 20 ஆண்டுகாலம் அவருடைய ஆட்சி இருந்தது அந்த ஆட்சி காலம் சிவாஜி சிவாஜி உடைய மகன் சாக்கோ ஜி சாம்பசி அம்பிகாபாய் ராஜாராம் இத்தனை பேரும் மராட்டியவர்களுடைய ஆட்சி காலத்தில் அவருடைய வாரிசுகளாக இருந்து ஆட்சி செய்தார்கள் அவருடைய ஆட்சி காலத்தில் தான் இந்த செஞ்சி கோட்டை பலம் பொருந்திய கோட்டையாக மாறியது .

நாயக்க மன்னர்களுடைய ஆட்சி காலத்தில் கலைநயமிக்க கோட்டையாக அவர்கள் மாற்றினார்கள் இப்பொழுது இந்த செஞ்சி கோட்டை யுனெஸ்கோ நிறுவனத்தால் உலக பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டிருக்கிற செய்தி செஞ்சி வாழ் பகுதி மக்களின் போராட்டத்திற்கும் முன் முயற்சிக்கும் ஒன்றிய அரசும் மாநில அரசும் எடுத்த முயற்சியில் உலக பாரம்பரிய சின்னமாக இன்று அறிவித்திருக்கிறார்கள்.



சிதம்பரம் – புதூர் ஊராட்சி ஒன்றியம், வீரப்பட்டி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.29.70 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்கண்டேயன் திறந்து வைத்தார். உடன் புதூர் மேற்கு ஒன்றிய செயலாளர் மும்மூர்த்தி, புதூர் மத்திய ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன், ஒன்றிய பொறியாளர் தமிழ்ச்செல்வன், மாவட்டப் பிரதிநிதி முருகேசன், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் துரைப்பாண்டியன் உட்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம், போடி நாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி சங்கராபுரம் பாகம் எண் 202 ஓரணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர் சேர்க்கை சின்னமனூர் மேற்கு ஒன்றிய மாவட்டப் பிரதிநிதி பா.இராதாகிருஷ்ணன், ஒன்றிய பொருளாளர் கணேசன், கிளை கழகச் செயலாளர் சுரேஷ்குமார் , முகவர் செந்தில்குமரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் - நாகர்கோவில் மாநகர பகுதியில்

# மாற்றுக் கட்சியைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர்!

### மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் முன்னிலையில்!

கன்னியாகுமரி, ஜூலை 14 - தமிழ்நாட்டின் முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றபின் அவரது ஆட்சியின் செயல்பாடுகளை பார்த்து பல்வேறு மாற்று கட்சியை சேர்ந்த ஏராளமானோர் தொடர்ந்து தி.மு.க.வில் இணைந்து வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர பகுதி மாற்று கட்சியை சேர்ந்த இளைஞர்கள், கல்லூரி மாணவர்கள் உட்பட 200 க்கும் மேற்பட்டோர் வடிவீஸ்வரம் பகுதியைச் சேர்ந்த எம்.ஆனந்த் தலைமையில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைத்து கொண்டனர்.

மாற்றுக் கட்சியில் இருந்து வந்தவர்களை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ மகேஷ் சால்வை அணிவித்து வரவேற்றார்.

நிகழ்ச்சியில் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் இன்பா ஏ. என்.ரகு, தலைமை கழக செய்தி தொடர்பு துணை செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மாநகர செயலாளர் ஆனந்த், கழக சமூக வலைதள பயிற்சியாளர் விக்னேஷ் ஆனந்த், குமரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அகஸ்தீசன், மாணவர் அணி அமைப்பாள் அருண் காந்த், வட்ட செயலாளர் கள்ஜீவா,முத்துகிருஷ்ணன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.



விழுப்புரம் மாவட்டத்தில் சுற்றுலாத்தலமாக உள்ள செஞ்சி கோட்டையை உலக பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோ அறிவித்ததை வரவேற்று செஞ்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில் தி.மு.க.வினர் பட்டாசு வெடித்து பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினர். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சிபேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், துரை பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், நகரச் செயலாளர் கார்த்திக் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.




## தி.மு.க. இளைஞர் அணி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

திருநெல்வேலி மத்திய மாவட்ட நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 19.07.2025 சனிக்கிழமை | மாலை 6.00 மணி | திருநெல்வேலி மத்திய | ஹோட்டல் அப்னா பார்க், வண்ணாரப்பேட்டை. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–9–இல் கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு மற்றும் திருநெல்வேலி மத்திய ஆகிய மாவட்டங்களில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 19.07.2025 சனிக்கிழமை | காலை 9.00 மணி | ராதாபுரம் | எம்.எஸ்.மஹால், வள்ளியூர். |
| 20.07.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | பாளையங்கோட்டை | ஹோட்டல் அப்னா பார்க், வண்ணாரப்பேட்டை. |
| | மாலை 4.00 மணி | திருநெல்வேலி | ஏ.ஆர்.திருமண மண்டபம், சங்கரன்கோவில் சாலை, கானார்பட்டி, மானூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 09.07.2025

கலைஞர் 100
1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி